ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2167/6 - 2020 මාර්තු මස 17 වැනි අඟහරුවාදා - 2020.03.17

*2167/6 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 17 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு

அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 43(1) ஆம் உறுப்புரை மற்றும் 46(1) (அ) ஆம் உறுப்புரையின் வண்ணம் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து, என்னால், 2019, திசெம்பர் மாதம் 10 ஆந் திகதிய 2153/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு, காலத்துக்குக்காலம் திருத்தப்பட்ட அறிவித்தலானது, உடனடியாக நடைமுறைக்குவருமாறு மேலும் கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு திருத்தப்படுகின்றது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**கோட்டாபய ராஜபக்ஷ,**
*சனாதிபதி.*

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2020, மாச்சு 13.

**அட்டவணை**

(1) அவ்வறிவித்தலில் இல. (1) "பாதுகாப்பு அமைச்சர்" என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:-

(அ) அதன் நிரல் I இல் 35 ஆவது விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன் மூலம்;

36. குடிவரவு மற்றும் குடியகல்வு அலுவல்கள்
37. இலங்கை குடியுரிமைக்குரிய நடவடிக்கைகள்

1A - G 31984 — 382 (2020/03)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(ஆ) அதன் நிரல் I இல் 36 ஆவது விடயத்திலிருந்து மீண்டும் இலக்கமிடுவதன் மூலம்;

(இ) அதன் நிரல் II இல் 31 ஆவது விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன்மூலம்;

32. குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்

(ஈ) அதன் நிரல் III இல் "(2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க) இலங்கை அனர்த்த முகாமைத்துவச் சட்டம்" எனும் விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன் மூலம்;

- (1948 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க) குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டம்
- (1948 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க) குடியுரிமைச் சட்டம்
- (2003 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க) இந்திய வம்சாவளி ஆட்களுக்கு பிரசாவுரிமை வழங்கல் சட்டம்
- (1986 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க) உள்நாட்டவரல்லாதோருக்கு பிரசாவுரிமை வழங்கல் சட்டம்
- (1988 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க) உள்நாட்டவரல்லாதோருக்கு பிரசாவுரிமை வழங்கும் (விசேட ஏற்பாட்டு) சட்டம்

(2) அவ்வறிவித்தலில் இல. (24) "மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்" என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:-

(அ) அதன் நிரல் I இல் 2 ஆவது விடயம்-

2. "சூரிய, நீர், அனல், நிலக்கரி, கழிவுப்பொருட்கள் மற்றும் காற்று ஆகிய மூலவளங்களின் மூலம் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி, மின்சக்தி மற்றும் ஏனைய வலுசக்தி உற்பத்தி செய்தல் தொடர்பான அலுவல்கள் மீதான ஆராய்ச்சி, திட்டமிடல், அபிவிருத்தி மற்றும் கண்காணிப்பு" எனவும்

(ஆ) அதன் நிரல் I இல் 4 ஆவது விடயம்-

4. "வலுசக்தி வினைத்திறன் ஏற்படும் வகையில் கேள்விப்பாட்டை முகாமைத்துவம் செய்தல் மற்றும் புதுப்பிக்கத்தக்க மின்சக்தியை அபிவிருத்தி செய்தல்" எனவும்

(இ) அதன் நிரல் I இல் 10 ஆவது விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன்மூலம்;

11. சூரிய வலுசக்திக் கருத்திட்டங்களின் செயற்படுத்துகை

12. கிராமிய மின்வலுப்படுத்துகை

13. விசேட முன்னுரிமைகளாக இனங்காணப்பட்ட (LNG) மின்சக்திக் கருத்திட்டங்கள், திரவத்தன்மையுடைய இயற்கைவாயு, நிலக்கரி மின்சக்திக் கருத்திட்டங்கள் என்பவற்றை துரிதமாக நிர்மாணித்தலும் செயற்படுத்துதலும்

(ஈ) அதன் நிரல் I இல் 11 ஆவது விடயத்திலிருந்து மீண்டும் இலக்கமிடுவதன்மூலம்;

(உ) அதன் நிரல் II இல் 8 ஆவது விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன்மூலம்;

9. இலங்கை மின்சாரக் கம்பனி
10. வரையறுக்கப்பட்ட இலங்கை நிலக்கரி (தனியார்) கம்பனி
11. இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை

(ஊ) அதன் நிரல் III இல் "(2003 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க) பெற்றோலிய வளங்கள் அபிவிருத்திச் சட்டம்" எனும் விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன்மூலம்;

"(2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க) இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபைச் சட்டம்"

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.